**விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2015**

---

விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 ஆந்த திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1994 மார்ச் 09 ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2002 ஆம் ஆண்டின்போது இந்த நிதியத்துடன் சுழற்சி நிதியத்தையும் கமநல நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தையும் ஒன்றிணைத்த போது அந்த நிதியங்களில் காணப்பட்ட ரூபா 81,147,096 தொகையான கீழே காண்பிக்கப்படுகின்ற சொத்துக்களும் பொறுப்புக்களும் கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் அந்த மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| | **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| (அ) | சேமிப்புக் கணக்கு | 7,241,655 | மீதிகள் உறுதிப்படுத்தும் கடிதங்கள் |
| (ஆ) | பிரதி கமநல சேவை ஆணையாளர் (கமநல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) | 1,679,901 | |
| (இ) | விவசாயக் கம்பனி | 8,200,000 | |
| (ஈ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (கமநல நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்) | 7,923,175 | கடன்பட்டோர் மீதிகள் பட்டியல் |
| (உ) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு - சுழற்சி நிதியம் | 44,200,176 | விரிவான பட்டோலை |
| | **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| (அ) | பெறவேண்டிய நீண்ட காலக் கடன் - கமநல சேவைகள் குழுக் கணக்கு | 9,112,579 | கடன்பட்டோர் மீதிகள் பட்டியல் |
| (ஆ) | வாசனைத் திரவிய அண்மித்த பொருள் சபை | 1,500,000 | |
| | **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | |
| | விவசாயிகளின் வைப்பு | 697,644 | வைப்புப் பதிவேடு |

**தேறிய சொத்துக்கள் / உரிமை மூலதனம்**

| | | |
|---|---|---|
| பங்குகள் | 591,965 | பங்குதாரர்களின் பங்குப் பணத்தைக் காட்டுகின்ற பெயர்ப்பதிவேடு |
| | -------------- | |
| | 81,147,095 | |
| | ======== | |

## 2.3 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முற்பணத்தின் கீழ் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாதுள்ள ரூபா 8,054,388 கூட்டுத்தொகையான 04 மீதிகளை அறவிடுவதற்காக 2014 ஒக்தோபர் மாதத்தின் போது மூன்றாம் தரப்பினர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையிலும் இந்தக் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவிலலை.

(ஆ) 2003 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய தேசிய கால்நடை அபிவிருத்தி சபையிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 98,023,448 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன் அது மொத்தக் கடன் பணத்தில் 83 சதவீதமாக இருந்தது.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 34,053,478 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,814,015 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 45,867,493 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டி வருமானம் ரூபா 26,116,366 இனால் குறைவடைந்திருந்த போதிலும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 71,120,185 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாக இருந்தது.

2011 முதல் மீளாய்வாண்டு வரையான நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்தபோது 2014 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய ஆண்டுகளின் போது, நிதி மிகை காணப்பட்டது. ஊழியர் சம்பளம், வருமான வரி மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது நிதியத்தின் பங்களிப்பு 2014 ஆம் ஆண்டினைத் தவிர ஏனைய ஆண்டுகளின் போது நேர்ப்பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013, 2014 ஆம் ஆண்டுகளில் பங்களிப்பு முறையே 94 சதவீதத்தினாலும் 175 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அது மீண்டும் 457 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் நிதியத்தினால் செலவிடப்பட்ட அபிவிருத்திச் செலவினம் பங்களிப்பின் தளம்பல் தொடர்பில் நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

# 4. செயற்பாட்டு மீளாய்வு

## 4.1 செயலாற்றல்

இந்நாட்டில் விவசாய மக்களின் கமநல அபிவிருத்தி மற்றும் நலன்களை விருத்தி செய்தல், சிறியளவிலான விவசாயிகளுக்காக குறுங்கால கமநலக்கடன் வசதிகளை வழங்குதல், சிறிய அளவிலான விவசாயிகளுக்காக விவசாய உள்ளீடுகளை வழங்குதல், நிதிக் கஷ்டங்களை நீக்குவதற்காக சிறியளவிலான விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை

வழங்குதல், சிறுஅளவிலான விவசாயிகளின் கமநல அபிவிருத்தி மற்றும் நலன்புரிகளுக்குரிய தெளிவுபடுத்தல்கள், கண்காட்சி மற்றும் முன்மாதிரிகளை நடாத்துதல் மற்றும் ஏனைய பல்வேறு செயற்பாடுகளுக்காகவும் தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல், பயிர்ச் செய்கை மற்றும் விலங்கின உற்பத்தி மற்றும் உற்பத்திச் செயன்முறைகளுக்காக சிறிய அளவிலான விவசாயிகளுக்கு உதவி செய்தல் மற்றும் கமத்தொழில் அபிவிருத்திக்கு வசதிகளை வழங்கும் வகையில் விஷேட கமநல நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விவசாயிகளின் கமநல அபிவிருத்தி மற்றும் நலன்களை விருத்தி செய்தல்.**

நிதியத்தின் 2015 ஆம் ஆண்டின் பாதீட்டின் பிரகாரம் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக ரூபா 170,200,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த நிதிஏற்பாடுகளில் 72 சதவீதம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 15 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சிறிய அளவிலான விவசாயிகளுக்காக குறுங்கால கமநலன் கடன் வசதிகளை வழங்குதல்.**

(i) குறுங்காலக் கடனின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து அமுல்படுத்துவதற்கு மதிப்பிடப்பட்ட 12 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதாவது ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுத் தொகையான ரூபா 40,610,495 இல் 45 சதவீதம் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது.

(ii) குறுங்காலக் கடனாக மீளாய்வாண்டின்போது அனுராதபுரம் மாவட்ட செயலாளர், தேசிய உணவு மேம்படுத்தல் சபை மற்றும் விவசாய பணிப்பாளர் நாயகம் என்போருக்கு வழங்கப்பட்ட ரூபா 21,361,038 தொகையில் கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ரூபா 7,908,500 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் அது வழங்கப்பட்ட கடன் பணத்தில் 37 சதவீதமாகும்.

(iii) ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொள்வோமாயின் மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு மதிப்பிடப்பட்ட மொத்தக் கடன் தொகையான ரூபா 285,000,000 இல் ஆண்டின் போது கடனாக 32 சதவீதம் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அபிவிருத்திப் பணிகளுக்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட முற்பணத் தொகையிலிருந்து முறையே ரூபா 1,749,740 தொகை மற்றும் ரூபா 958,687 தொகைகள் தீர்க்கப்படாத மீதிகளாக தொடர்ந்தும் காணப்பட்டன. முன்னைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதிலுள்ள தாமதம் இந்த ஆண்டின் அபிவிருத்திச் செலவினம் 79 சதவீதம் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது.

(ஆ) நீண்ட காலக் கடனின் கீழ் வடமேல் மாகாணத்தில் நெற்பயிர்ச் செய்கையில் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்தில் நாற்றுக்களை நடும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்வதற்கு விவசாயிகளுக்குக் கடன் பணம் வழங்குவதற்காக ரூபா

40,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் விவசாயிகளைத் தெரிவு செய்தல் மற்றும் கடன் வழங்கும் செயற்பாடுகளில் ஏற்பட்ட உரிய பிரச்சினைகளைத் தீர்க்கும் போது ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக மீளாய்வாண்டின் போது இந்த இச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்குமிடையே 51 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய பீஎப்டீ/ஆர்ஈடீ/01/04/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கடன்பட்டோர் கட்டுப்பாடு | கடன் மீதியை அறவிடுவதில் தாமதம் மற்றும் இனங்காணப்படாத கடன் மீதி தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் தாமதம் |
| (ஆ) நிதியத்தின் பயன்பாடு | மதிப்பிடப்பட்டதன் பிரகாரம் கடன் தொகை செலுத்துதல் மற்றும் அபிவிருத்திச் செலவினங்களைச் செய்வதற்காக நிதியம் பயன்படுத்தப்படாமை |